செய்தி வெளியீடு: 736 - 14.11.07

தொழிலாளர் துறை – பத்திரிக்கைச் செய்தி

## வேலையிலிருந்து மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் பொதுச்சுவரில் கருத்துச் சித்திரம் வரையும் நிகழ்ச்சி

தமிழக அரசு குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் முனைப்புடனும், தீவிர ஈடுபாட்டுடனும் செயல்பட்டு வருகிறது. வீடுகள் மற்றும் ஓட்டல்கள், மோட்டல்கள், சாலையோர உணவகங்கள் மற்றும் பொழுதுபோக்கு இடங்களில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை பணியமர்த்துவதை தடை செய்து, குழந்தைத் தொழிலாளர் சட்டத்திற்கு மத்திய அரசால் திருத்தம் வழங்கப்பட்டு, 10.10.2006 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. வீட்டு வேலை மற்றும் உணவு நிறுவனங்களில், குழந்தைத் தொழிலாளர்கள் பணிபுரிவதை தடை செய்வதற்கான தமிழக அரசின் செயல் திட்டம் ஒன்று அரசாணை (2டி) எண் 7, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 6.2.07–ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த செயல் திட்டமானது குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுவதற்கான இலக்கினை எட்டுவதற்கான அணுகுமுறைகளையும், திட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு பங்கேற்பாளர்களின் பொறுப்புகளையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, மாநிலம் முழுவதும் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்காக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 14.11.2007 அன்று நடைபெற்றது. சென்னையில் கொருக்குப்பேட்டை, சைதாப்பேட்டை, நொச்சிக்குப்பம், புளியந்தோப்பு ஆகிய இடங்களில் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள், பள்ளி குழந்தைகள், தொழிலாளர் துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்ட குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான மனித சங்கிலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், 14.11.07 முதல் தொடர்ந்து 15 தினங்களுக்கு மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், குழந்தைகளுக்கு மறுவாழ்வளிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள குடிசை மாற்று வாரிய அலுவலக கட்டிட வெளிப்புற சுவற்றில் குழந்தைகளின் உரிமைகளை வலியுறுத்தியும், குழந்தைத்தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்தும் கருத்து சித்திரங்கள் சென்னை, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களால் வரையப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலர் திரு. ரமேஷ்குமார் கன்னா, இ.ஆ.ப, தொழிலாளர் துறை ஆணையர்திரு. அ. சுகுமாரன், இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. கே. செல்லமுத்து, இ.ஆ.ப., குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. தி.கே. இராமசந்திரன், இ.ஆ.ப, மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பள்ளி குழந்தைகள், தொழிலாளர் துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

for STATE COORDINATOR
STATE CHILD LABOUR REHABILITATION
CUM WELFARE SOCIETY-APUL 650
CHENNAI-600 006.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை